பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
26 11 2026 THURSDAY - 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய குற்றவியல் சட்டங்கள், விரைவான நீதி வழங்குவதை உறுதி செய்வதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. இந்திய அரசியல் சாசனம், மக்களின் எதிர்பார்ப்புகளை பிரதிபலிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. மேற்குவங்க மாநிலத்தில் சாலை பணிகளுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் செயல்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

4. தீவிரவாத ஒழிப்பில் இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

5. ஆசிய பசிபிக் காது கேளாதோருக்கான கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது

>>>>>><<<<<<

மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய குற்றவியல் சட்டங்கள், விரைவான நீதி வழங்குவதை உறுதி செய்வதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற அரசியல் சாசன தின விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், தண்டனை வழங்குவதற்கு பதிலாக, நீதி வழங்குவதை முதன்மையாக கொண்டு இந்தப் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.
கடந்த 80 ஆண்டுகளில் தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்களின் தாக்கம் காரணமாக, பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.
அண்மைக்காலமாக, ஆங்கிலேய காலனி ஆதிக்க மனப்பான்மையிலிருந்து விடுபட்டு, நமது பாரம்பரியத்தை பறைசாற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்திய அரசியல் சாசனம், மக்களின் எதிர்பார்ப்புகளை பிரதிபலிப்பதாக உள்ளது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
அரசியல் சாசன தினத்தை ஒட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நமது அரசியல் சாசனம் ஒரு சட்ட நடைமுறையாக மட்டுமல்லாமல், நாட்டின் ஆன்மாவாக திகழ்கிறது என்று கூறினார்.
அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளிலும் இந்த சாசனம் வெளியிடப்பட்டிருப்பது நாட்டின் மொழி பன்முகத் தன்மை மற்றும் ஜனநாயக மாண்புகளை எடுத்துரைப்பதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
அரசியல் சாசனத்தை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கரின் பங்களிப்புகள், நாட்டின் ஜனநாயக பயணத்திற்கு தொடர்ந்து வழிகாட்டுவதாக இருக்கும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
முன்னதாக, இந்த நிகழ்ச்சியில், 22 மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் சாசன நூல்களை குடியரசு துணைத்தலைவர் வெளியிட்டார்.
புதுதில்லியில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சியில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, அரசியல் சாசனத்தைப் போற்றுவது நாட்டு மக்கள் அனைவரது கடமை என்று தெரிவித்தார்.

நமது அரசியல் சாசனம், நாட்டின் நம்பிக்கை மற்றும் நற்பண்புகளை பிரதிபலிப்பதாக அவர் கூறினார்.
சுதந்திரத்திற்குப் பிறகு, ஆட்சிக்கு வந்தவர்கள், அரசை நடத்துவதற்கான வழிகாட்டும் புத்தகமாக மட்டுமே இதனை கருதி வந்ததாக அவர் தெரிவித்தார்.

அரசியல் சாசனம் குறித்து, நாட்டு மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் திரு. அமித் ஷா வலியுறுத்தினார்.

பாட்னாவில் நடைபெற்ற அரசியல் சாசன தின பொதுக்கூட்டத்தில் பேசிய பி.ஜே.பி. தலைவர் திரு.நிதின் நபின், நாட்டின் கலாச்சாரம் மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தின் அடிப்படையில் அரசியல் சாசனம் வகுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

புத்தபிரான் மற்றும் மகாவீரரின் கருத்துக்கள், அரசியல் சாசனத்தின் 5 மற்றும் 6-வது அத்தியாயங்களில் இடம் பெற்றிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்தபோது, சுயநலத்திற்காக அரசியல் சாசனத்தை பின்பற்றத் தவறிவிட்டதாகவும் திரு. நிதின் நபின் குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

இந்தியா – செஷல்ஸ் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இருநாடுகளும் உறுதி பூண்டுள்ளதாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
புதுதில்லியில் இன்று, செஷல்ஸ் வெளியுறவு அமைச்சர் திரு. Barry Faure-ஐ சந்தித்துப் பேசிய பின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இந்தியப் பெருங்கடல் நாடுகள் கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள செஷல்ஸ் நாட்டுடன், சுகாதாரம், போக்குவரத்து, திறன் பயிற்சி, எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்டதுறைகளில், ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
மேலும், மத்திய அரசின் மஹாசாகர் கொள்கை மற்றும், பல்வேறு பிராந்திய விவகாரங்கள் குறித்தும், செஷல்ஸ் அமைச்சருடன் ஆலோசனை நடத்தியிருப்பதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தெற்கு ரயில்வேக்கு உட்பட்ட பகுதிகளில், 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் 77 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும், பல்வேறு ரயில் நிலையங்களின் மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளதாகவும் கூறினார்.
தமிழகத்தில் 9 வழித்தடங்களில் வந்தேபாரத் ரயில்கள் இயக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.
சென்னை - பெங்களூரு இடையேயான புல்லட் ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் போது, பயண நேரம் 73 நிமிடங்களாக குறையும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலத்தில், சாலைக் கட்டமைப்பை மேம்படுத்த, அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் செயல்படுத்தப்படும் என்று, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தின் கோலாகாட்பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 27 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களைத் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

புதிதாக செயல்படுத்தப்படவுள்ள திட்டத்தின்படி, கொல்கத்தா மாநகரைச் சுற்றி, 250 கிலோமீட்டர் தொலைவுக்கு சுற்றுச்சாலை அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த பணிகள், உலகத் தரத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்க ஏதுவாக, இப்பணிகளுக்குத் தேவையான நிலம் கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் அனுமதி, ஆக்கிரமிப்பு அகற்றும் பணிகளில், மாநில அரசு ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், தொழில் முதலீடுகளை அதிகளவில் ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு, மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், உதவிகரமாக இருக்கும் என்று திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசின் 2027 - 28ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், புதுதில்லியில் இன்று இளைஞர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இக்கூட்டத்தில் நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை, கல்வித்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் செயலாளர்களும் கலந்து கொண்டதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

சீக்கிய மதகுரு Guru Teg Bahadur-ன் போதனைகள், தற்காலத்திற்கும் பொருந்துவதாக உள்ளது என்று மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற Guru Teg Bahadur-ன் 350வது நினைவு தின நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் பாரம்பரியம் மற்றும் தியாகிகளை நினைவு கூர்வது அவசியம் என்று தெரிவித்தார்.

மக்களிடையே சமத்துவம் நிலவச் செய்ய அரும்பாடுபட்டவர் Guru Teg Bahadur என்றும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் புகழாரம் சூட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<<

பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களில் உள்ள ஊட்டச்சத்து விவரங்களை அதில் இடம்பெறச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு. J.B. Pardiwala மற்றும் திரு. K. Vinod Chandran அடங்கிய அமர்வு, இந்த நடவடிக்கை ஆரோக்கியமான உணவுப் பொருட்களை தேர்ந்தெடுக்க நுகர்வோருக்கு உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்களில் சேர்க்கப்பட்டுள்ள சர்க்கரை, கொழுப்பு மற்றும் உட்டச்சத்து பொருட்களின் அளவை பாக்கெட்டுகளில் அச்சிட வேண்டும் எனவும் நீதிபதிகள் தங்களது உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<

ஐ.ஆர்.சி.டி.சி. ஹோட்டல் முறைகேடு வழக்கில், முன்னாள் ரயில்வே அமைச்சர் திரு. லாலு பிரசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பது சரியானதே என்று, தில்லி உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் குற்றச்சாட்டு பதிவு செய்ய விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, திரு.லாலு பிரசாத், அவரது மனைவி திருமதி.ராப்ரிதேவி மற்றும்

மகன் திரு. தேஜஸ்வி யாதவ் தாக்கல் செய்த மனுக்களையும், தில்லி உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.
எனினும், விசாரணை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கக் கோரி, திரு.லாலு பிரசாத் உள்ளிட்டோர் தாக்கல் செய்துள்ள மறு ஆய்வு மனு குறித்து பதிலளிக்குமாறு, மத்திய புலனாய்வு அமைப்புக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டுள்ளார்

>>>>>>><<<<<<

தீவிரவாத ஒழிப்பில் இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக, அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் அறிவித்துள்ளன.

மும்பை தீவிரவாத தாக்குதல் தினத்தையொட்டி, இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு.செர்ஜியோ கோர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த தாக்குதலில் அமெரிக்காவைச் சேர்ந்த 6 பேர் உட்பட 166 பேர் உயிரிழந்ததை நினைவுகூர்ந்துள்ளார்.

மும்பை தாக்குதலில் தொடர்புடைய குற்றவாளிகளை, சட்டத்தின் முன் நிறுத்துவதில், அமெரிக்கா, தொடர்ந்து இந்தியாவிற்கு உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தீவிரவாத தாக்குதல் பாதிப்பிலிருந்து மீண்டுவந்த இந்திய மக்களின் துணிச்சலைப் போற்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதத்திற்கு எதிராக, இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு, இஸ்ரேல் உறுதுணையாக இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.
இதேபோன்று, ஈரான், உள்ளிட்ட நாடுகளும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

>>>>>>><<<<<<

ஆசிய பசிபிக் காது கேளாதோருக்கான கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.
தென்கொரியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 7-0 என்ற கோல்கணக்கில் தாய்லாந்தை வென்றது.
இந்த வெற்றியின் மூலம், அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலக காதுகேளாதோர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் பங்குபெற இந்தியா தகுதி பெற்றுள்ளது.

>>>>>>END<<<<<<